**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 06–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**
**தீர்மானம் எண் :267 / 2020, நாள் : 06.01.2020**

1) சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண். 1 முதல் 22 வரை பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. இந்நிலையில் பெரும்பாலன நகர பகுதிகளில் (கீழ்கண்ட சாலைகள்) பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் செல்லும் குழாய்கள் அமைக்கப்பட்டு தற்காலிக சாலைகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் சீரமைக்கப்பட்டுள்ளது. இச்சாலைகள் வாகனங்கள், இரு சக்கரங்கள் மற்றும் இதர வாகனங்கள் பயனிக்க மிகவும் சிரம்மாக உள்ளதாக அப்பகுதி பொதுமக்கள் அடிக்கடி புகார்கள் தெரிவித்து வருகிறார்கள். இதனை சிறப்பினமாக கருதி விரைவாக பழுதான சாலைகள் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட அவசியம் ஆகும். இந்நகராட்சிக்கு வருவாய் நிதியில் போதிய நிதி ஆதாரங்கள் இல்லாததாலும் 14 வது நிதி குழு மானியத்தில் சாலை சீரமைக்கும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Ward No | Name of the Road | Type of Road (BT/CC/ Paver Block,Etc) | Length (in M) | Width (in M) | Estimate cost (Rs.In Lakhs ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1,2,3 | Improvements of Existing BT Surface Road at Tippusulthan Road in Sathyamangalam Municipality | BT Road | 1050.00 | 8.00 | 30.00 |
| 2 | 10 | Improvements of Existing BT Surface Road at Kattabomman Nagar in Sathyamangalam Municipality | BT Road | 750.00 | 4.10 & 5.00 | 32.70 |
| 3 | 11 | Improvements of Existing BT Surface Road at Rajiv Nagar in Sathyamangalam Municipality | BT Road | 770.00 | 4.10 | 35.00 |
| 4 | 11 | Improvements of Existing BT Surface Road at Athani Lane No I in Sathyamangalam Municipality | BT Road | 770.00 | 4.10 | 35.00 |
| 5 | 12 | Improvements of Existing BT Surface Road at Kongu Nagar in Sathyamangalam Municipality | BT Road | 440.00 | 6.00 &4.10 | 20.00 |
| | | **Total** | | **3780.00** | | **152.70** |

அலுவலக குறிப்பு:-
1) மேற்கண்ட பணிகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2)14 வது மத்திய நிதி குழு மானிய திட்டத்தின் 2019-2020 இன்கீழ் முதல் தவனை 50% ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ளலாம்,மீதமுள்ள தொகைக்கு நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு .எண். 5/2020/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 06–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 268 / 2020, நாள் : 06.01.2020**

2) சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. மண்டல எண்.3இல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இந்நிலையம் அமைக்கும் பொருட்டு அப்பகுதி பொதுமக்களிடமிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் ஆற்றுப்படுகையில் விட கூடாது பல தடவை புகார் அளிக்கப்பட்டும், சாலை மறியல் போன்ற போரட்டங்கள் நடத்தி கொண்டு வருகிறார்கள் மேலும், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகள் நடைபெறும் பொழுது அடிக்கடி தடுத்து வருகிறார்கள். இப்பிரச்சணைக்கு தீர்வு காண ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அமைதி பேச்சுவார்த்தை கூட்டம் நடத்தப்பட்டது. இதில் தற்போது கட்டப்பட்டு வரும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்ததில் இருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் அருகிலுள்ள காலி இடத்தில் ஒரு கீழ் நிலைத்தொட்டி கட்டி நீர் தேக்கிவைத்து விவசாய பயன்பாட்டிற்கு பயன்படுத்தி கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. தற்பொழுது ரங்கசமுத்திரம் பகுதியை சேர்ந்த திரு.கே.பி.வெங்கடாசலம் 35/3 மேட்டுபாளையம் ரோடு சத்தியமங்கலம் அவர்களின் கடிதத்தில் தனது விவசாய நிலத்திற்கு சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து வரும் சுத்திகரிக்கப்பட்ட நீரை எடுத்து கொள்வதாக தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளார்கள். எனவே,கோட்டுவீரம்பாளையம் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து ரங்கசமுத்திரம் பகுதி ஆர்.எம்.பி.நகரில் உள்ள அவரது நிலம் வரை பவானி ஆற்றை கடந்து பைப்லைன் அமைத்து கொடுத்தால் தான் எடுத்து கொள்வதாக தெரிவித்துள்ளார்கள். எனவே, அதன்படி கோட்டுவீரம்பாளையம் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து பவானி ஆற்றை கடந்து பைப்லைன் அமைக்க உரிய திட்ட மதிப்பீடு தயார் செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பாதாள சாக்கடை திட்டம் பெருந்துறை அவர்கள் மூலம் மேற்கொள்ள அதற்கான நிதியை அரசிடம் சிறப்பு மானியமாக பெறவும் நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண். 4444/2011/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 06–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**
**தீர்மானம் எண் :269/ 2020, நாள் : 06.01.2020**

3) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 15891/2016/எச்3 நாள் 6.1.2020 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.113/2020/எ1 நாள் 8.1.2020 கடிதங்களின்படி தமிழ்நாடு நகராட்சி பணி விதிகளின்படி பணியிடம் உருவாக்கம் மற்றும் பணியிடங்கள் பூர்த்தி செய்தல் அட்டவணையின் உண்மைத் தன்மை சான்று வழங்க கோரியதன்படி இந்நகராட்சி முதல் நிலை நகராட்சியாக அரசாணை எண்.85 ந.நி.ம.கு.வ.துறை நாள் 22.5.1998-இன்படி தரம் உயர்த்தப்பட்டது. அதன்படி கீழ்க்கண்டவாறு நகராட்சி மேலாளர், வருவாய் அலுவலர் மற்றும் கணக்கர் ஆகிய பொதுப்பிரிவு பணியிடங்கள் தோற்றுவிக்க இந்நகராட்சியின் ஊதிய செலவினம் 49 சதவீதத்திற்கு அதிகமாக உள்ளமைக்கான வரவு செலவு அறிக்கையுடன் சான்றொப்பமிட்டு வழங்க கோரியதன்படி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியிடத்தின் பதவி | தற்போதுள்ள பணியிட நிலை விபரம். | தரம் உயர்த்தப்படும் பணியிட நிலை விபரம் | தேவைப்படும் பணியாளர் களின் எண்ணிக்கை | தரம் உயர்த்தப்பட்டால் நிர்ணயம் செய்யப்பட வேண்டிய ஊதியம் |
|---|---|---|---|---|---|
| 1. | மேலாளர் | வகுப்பு-4 | வகுப்பு -2 | 1 | Pay Band -II /Level-12<br>Rs. 35600-112800 |
| 2. | வருவாய் அலுவலர் | -- | வகுப்பு -4 | 1 | Pay Band -II /Level-11<br>Rs. 35600-112400 |
| 3. | கணக்கர் | -- | வகுப்பு-4 | 1 | Pay Band -II /Level-11<br>Rs. 35600-112400 |

அலுவலகக் குறிப்பு:
1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இந்நகராட்சி தரத்திற்கு ஏற்றவாறு கீழ்க்கண்ட பணியிடங்கள் தரம் உயர்த்த பட்டியலிடப்படுகிறது.

(கட்டு எண். 110/2016/சி1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 06–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 270 / 2020, நாள் : 06.01.2020**

4) சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கடை இனங்களுக்கு 30.9.2019 உடன் உரிமக் காலம் அரசாணை எண்.(நிலை)92 ந.நி.ம.கு.வ.(ந.நி.4) துறை நாள் 3.7.2007இன்படி 9 ஆண்டுகள் முடிவடைகிறது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 15316/2016/ஆர்3 நாள் 3.11.2016-ல் தெரிவிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி தற்போதைய சார் பதிவாளர் மற்றும் PWD மதிப்பு பெறப்பட்டு அதன்படி வாடகை மதிப்பீடு, தற்போதைய சந்தை மதிப்பீடு அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறு வாடகை விபரம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 1842/2014/அ3இல் அமைக்கப்பட்ட குழுவின்படியும் இது ஏல உரிமதாரரின் பழைய வாடகையை காட்டிலும் குறைவாகவே சந்தை மதிப்பிடுகள் வருவதால் பழைய வாடகையுடன் அரசாணை எண். 92-ன்படி 15 சதவீதம் உயர்வு செய்து மேலும் 1.10.2019 முதல் 30.9.2022 முடிய மூன்றாண்டு காலத்திற்கு புதிய பேருந்து நிலைய கீழ்க்காணும் 10 கடை பழைய உரிமதாரருக்கு நீடிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| இனம் | கடை எண். | ஏல உரிமதாரர் பெயர் | வரி விதிப்பு எண். | பழைய மாத வாடகை | சார் பதிவாளர் மற்றும் PWD மதிப்பு | தற்போதைய மார்க்கெட் மதிப்பு | 15% உயர்வு செய்த பின் மாத வாடகை | உரிமக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| புதிய பேருந்து நிலையம் | 55 | கே.ராஜேந்திரன் | 061/3142 | 12564 | 4679 | 3973 | 14487 | 1.10.2019 முதல் 30.9.2022 வரை |
| ” | 56 | பி.கே.கோவிந்தராஜன் | 061/3143 | 9522 | 4679 | 3973 | 10950 | ” |
| ” | 57 | எல்.பழனிச்சாமி | 061/3144 | 9910 | 4679 | 3973 | 11397 | ” |
| ” | 58 | மன்சூர் அலி | 061/3145 | 9787 | 4679 | 3973 | 11255 | ” |
| ” | 59 | ஜி.கிரிகோரி | 061/3146 | 8067 | 4679 | 3973 | 9297 | ” |
| ” | 60 | டி.கே.சர்புதீன் | 061/3147 | 10448 | 4679 | 3973 | 12015 | ” |
| ” | 61 | எ.நவுபால் | 061/3148 | 11506 | 4679 | 3973 | 13232 | ” |
| ” | 63 | எஸ்.பி.சீனிவாசன் | 061/3150 | 10316 | 4679 | 3973 | 11863 | ” |
| ” | 64 | பி.வேலுச்சாமி | 061/3151 | 10183 | 4679 | 3973 | 11713 | ” |
| ” | 65 | பி.வேலுச்சாமி | 061/3152 | 10051 | 4679 | 3973 | 11559 | ” |

அலுவலகக் குறிப்பு:

மேற்காணும் 10 கடையினங்கள் 30.9.2019ஆம் தேதி உடன் 9 ஆண்டு காலம் முடிவடைவதால் மேலும் அரசாணை எண். 92 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.15316/2016/ஆர்3 நாள் 30.11.2016ல் தெரிவிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி பொதுப்பணித்துறை மற்றும் சார்பதிவாளர் சந்தை மதிப்பு அடிப்படை மற்றும் தற்போதைய சந்தை அங்காடி அடிப்படை மதிப்பிலும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், திருப்பூர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட குழுவின்படியும் கால அவகாசம் கருத்தில் கொண்டும் தற்போது செலுத்தி வரும் மாத வாடகையைக் காட்டிலும் தற்போதைய அங்காடி மதிப்புகள் குறைவாக இருப்பதாலும் இழப்புகள் ஏதும் இல்லாததாலும் பழைய வாடகையிலே அரசாணை எண்.92-ன்படி 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்ட வாடகையின் அடிப்படையில் 1.10.2019 முதல் 30.9.2022 வரை உள்ள காலத்திற்கு உரிம ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு மூன்றாண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்து உரிமம் புதுப்பித்து அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.3800/2016/அ3)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 06–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 271 / 2020, நாள் : 06.01.2020**

5) சத்தியமங்கலம் நகராட்சி பகுதி 27 வார்டுகளுக்கான சொத்துவரி, காலியிட வரி, தொழில்வரி மற்றும் குடிநீர்க் கட்டணங்கள் 2019-2020ஆம் ஆண்டிற்கான வரியினங்களை 100% வசூல் செய்ய உரிய காலங்களில் செலுத்தக்கோரி பொதுமக்கள் அறியும் வண்ணம் ஆட்டோ மூலம் ஒலிஒளி அமைத்து விளம்பரம் செய்ய உத்தேச செலவினம் ரூ.50,000/-ஐ செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. 2019-2020ஆம் ஆண்டிற்கு வரி மற்றும் வரியில்லா இனங்கள் 100% எய்தும் பொருட்டு பொதுமக்கள் அறியும் வண்ணம் ஆட்டோ மூலம் ஒலிஒளி அமைத்து நோட்டீஸ் மற்றும் பேனர் மூலம் விளம்பரம் செய்வதற்கான பொது நிதி மூலம் உத்தேச செலவினம் ரூ.50,000/- மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி விலைப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.865/2019/அ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 272 / 2020, நாள் : 31.01.2020**

1) இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்களின் டிசம்பர் 2019ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 273 / 2020, நாள் : 31.01.2020**

2) இந்நகராட்சியின் நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர் 2019ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 274 / 2020, நாள் : 31.01.2020**

3) 2019-2020 ஆம் ஆண்டு 14 வது நிதி குழு மான்யம் திட்டத்தின் கீழ் சாலைகள் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண். 267 நாள்.06.1.2020 இன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை தினமணி (தமிழ் நாளிதழ்) விளம்பரம் செய்த M/s.SKY Ads Erode நிறுவனத்திற்கு ரூ.33224.00 வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு :
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், 2019-20 ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(கட்டு எண்.5/2020/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 275/ 2020, நாள் : 31.01.2020**

4) 2019-2020ஆம் ஆண்டு 14 வது நிதி குழு மான்யம் திட்டத்தின் கீழ் சாலைகள் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண். 267 நாள்.06.1.2020 இன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை தினதந்தி (தமிழ் நாளிதழ்) விளம்பரம் செய்த M/s.Sathya Agency Erode நிறுவனத்திற்கு ரூ.13238.00 வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு :
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், 2019-20 ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.5/2020/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 276 / 2020, நாள் : 31.01.2020**

5) சத்தியமங்கலம் நகராட்சி பகுதி மண்டலம் எண்.3 இல் கோட்டுவீரம்பாளையம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் 4.08 MLD கொள்ளளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இதில் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு பவானி ஆற்றில் நீர் கலக்க பொதுமக்கள், அரசியல் கட்சிகள், நதி நீர் பாதுகாப்பு அமைப்பு போன்றவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து ஆர்பாட்டம் நடத்தியதால் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களால் அமைதி பேச்சுவார்த்தை கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் பல அரசியல் பிரமுகர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டு சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் பவானி ஆற்றினை கடந்து அக்கரையில் உள்ள ஆர்.எம்.பி நகர் பகுதியில் கீழ்நிலை தொட்டி கட்டி அங்கு உள்ள விவசாய பூமிகளுக்கு நீர் வழங்க முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி உரிய விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்க இந்நகர் மன்ற தீர்மானம் எண்.268/06.01.2020 இன்படி தீர்மானிக்கப்பட்டது. இதன் தொடர்பாக செயற்பொறியாளர் (பாதாள சாக்கடை திட்டம்) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 06.01.2020 அன்று திட்ட விரிவான அறிக்கை தயாரிக்க கோரி கடிதம் அனுப்பபட்டது. அதற்காக செயற்பொறியாளர்,தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பாதாள சாக்கடை திட்டம் பெருந்துறை அவர்களின் கடித ந.க.எண்.Letter.No.F.Sathy.UGSS/JDO/SEW/PDI/2020 dated :20.01.2020 இன்படி திட்ட விரிவான அறிக்கை (Detailed project Report ) ரூ.160.00 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. திட்ட விரிவான அறிக்கை நகர் மனறத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இப்பணி மேற்கொள்ள அரசு திட்ட மானியம் பெறவும், நிர்வாக அனுமதி வேண்டியும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசு நிதி திட்டத்தில் மானிய தொகை பெற்று பணி செய்யலாம்.

(கட்டு எண். 4444/2011/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 277/ 2020, நாள் : 31.01.2020**

6) அரசாணை எண்.492 நாள்.19.9.2013 இன்படி பாதாள சாக்கடை திட்ட பணிக்கு திட்ட மதிப்பீடு ரூ.54.26 கோடியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் மண்டலம் எண்.3 இல் வார்டு எண்.1 முதல் 22 வரை முழுவதும், மண்டலம் எண்.1 மற்றும் 2 இல் பகுதி இடங்களில் மேற்கொள்ள திட்ட மதிப்பீட்டில் வழி வகை செய்யப்பட்டது. நடப்பில் மண்டலம் எண்.3 இல் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணி மற்றும் இதர பணிகள் 90 சதவீத பணிகள் முடிக்கப்பட்டது. மண்டல எண்.1 மற்றும் 2 இல் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்ட பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதை தொடர்ந்து ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அமைதி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ரங்கசமுத்திரம் கிராமம் வார்டு -இ, பிளாக் 20 நகரளவை எண்.107 ல் நகராட்சிக்கு சொந்தமான 1.13 ஏக்கர் நிலத்தில் 30 சென்ட கொண்ட இடத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்ட மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் துவக்க நிலையில் உள்ளது. இந்நிலையில் திட்ட ஒதுக்கீடு ரூ.54.26 கோடியில் போதுமான நிதி இல்லாததால் புதிதாக திட்ட விரிவானஅறிக்கை தயாரிக்கவும், மண்டல எண்.1 மற்றும் 2இல் உள்ள அனைத்து பகுதிகளில் கழிவு நீர் குழாய்கள்,வீட்டு இணைப்பு நீட்டிக்கும் பணிக்கு நிதி பற்றாக்குறையாக உள்ளது. எனவே,மண்டலம் எண்.1 மற்றும் 2 இல் அனைத்து பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் புதிதாக விரிவான திட்ட அறிக்கை தயாரித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மண்டல எண்.1 மற்றும் 2இல் அனைத்து பகுதிகளிலும் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தலாம்.

(கட்டு எண். 4444/2011/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 278/2020, நாள் : 31.01.2020**

7) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகத்திற்கு 27 வார்டுகளில் 101 ஆழ்குழாய் கிணறு மின் விசை பம்புகள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி குடிநீர் மற்றும் ஆழ்குழாய் மின் மோட்டார்கள் வறட்சியின் காரணமாக அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு தண்ணீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. மேற்படி பழுதுகளை நீக்கம் செய்ய அவ்வப்போது தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுவதால் சீரான விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யவும் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றை ஆழப்படுத்திடவும் புதிய மோட்டார் பொருத்தவும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மேற்படி பழுதுகளை நீக்கம் செய்ய தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுவதால் சீரான விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் மின்மோட்டார்களை பழுது நீக்கம் செய்யவும் ஜனவரி வரை உள்ள காலத்திற்கு பராமரிப்பிற்கு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 279/ 2020, நாள் : 31.01.2020**

8) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகத்தில் 27 வார்டுகளில் 39.892 கி.மீ.அளவிற்கு குடிநீர் பகிர்மான குழாய்கள் உள்ளன. மேற்படி குடிநீர் குழாய்கள் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வீணாகி சாலையில் செல்கிறது. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோக பணிகள் குடிநீர் குழாய் உடைப்பு இல்லாமல் விநியோகத்தினை சீராக செயல்படுத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளர்கள். மேற்படி உடைப்புகள் சரிசெய்ய அவ்வப்போது தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுவதால் சீரான விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் பைப்லைன் உடைப்புகள் சரி செய்யும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மேற்படி பைப்லைன் உடைப்புகள் சரி செய்ய தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுவதால் சீரான விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் பைபலைன் உடைப்பு சரி செய்ய பராமரிப்பிற்கு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 280 / 2020, நாள் : 31.01.2020**

9) சத்தியமங்கலம் நகராட்சி 2019-2020 ஆம் ஆண்டு வருவாய், குடிநீர் ,கல்வி நிதி திட்டத்தின் கீழ், இந்நகர் மன்ற தீர்மானத்தின்படி வருவாய், குடிநீர், கல்வி நிதி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முறையே ஒப்பந்தப்புள்ளி 23.01.2020 தேதி அன்று கோரியதில் வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | Repairs and Maintaince of 5 Kva UPS and Batteries in Municipal Office Sathyamangalam Municipality | ரூ.300000 | M/s.Future Era Contractor Coimbatore | ரூ.264820 | -- |
| | | | M/s. Eye Soft Contractor Coimbatore | ரூ.265700 | -- |
| 2 | Repairs and Maintaince of Rangasamutheram Raw water No.1,No.2 20 HP, clear water no2 20 HP submersible motor coil repair work and Kombupallam 35 hp vertical turbine motor coil repair maintiance at Sathyamangalam Municipality | ரூ.400000 | M/s.Shree Vell Electricals Erode | ரூ.353350 | -- |
| | | | M/s.Guru Electricals Erode | ரூ.350350 | -- |
| 3 | Repairs and Maintaince of Rangasamuthiram Head Works Main Pannel Busbar, Switches - Raw Water and Filter House at Sathyamangalam Municipality | ரூ.400000 | M/s.Shree Vell Electricals Erode | ரூ.332000 | -- |
| | | | M/s.Guru Electricals Erode | ரூ.330000 | -- |
| 4 | Repairs and Maintaince of Rangasamuthiram Head Works OCB (Oil Circuit Breaker ) Main Pannel Busbar, Switches -Clear and Raw Water at Sathyamangalam Municipality | ரூ.880000 | M/s.Shree Vell Electricals Erode | ரூ.778000 | -- |
| | | | M/s.Guru Electricals Erode | ரூ.777000 | -- |
| 5 | Providing White and Colour Washing to the Buildings, Compound Wall, Toilet at New Busstand in Sathyamangalam Municipality | ரூ.500000 | M/s.Vino Constructions Bhavani Sagar | ரூ.441258 | மதிப்பீடு தொகையினை விட 0.03 % குறைவு |
| | | | Thiru.C.P.Gopalakrishanan Contractor Chennaimalai | ரூ.446480 | மதிப்பீடு தொகையினை விட 1.15 % அதிகம் |
| 6 | Providing Patch works to Rajiv Nagar, Tippusulthan Road,Forest Depo Street at Sathyamangalam Municipalty | ரூ.500000 | M/s.Vino Constructions Bhavani Sagar | ரூ.440692 | மதிப்பீடு தொகையினை விட 0.09 % குறைவு |
| | | | Thiru.C.P.Gopalakrishanan Contractor Chennaimalai | ரூ.441733 | மதிப்பீடு தொகையினை விட 0.24 % அதிகம் |

அலுவலக குறிப்பு :-
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய வ.எண்.1 M/s.Future Era, Coimbatore,வ.எண்.2 முதல் 4 வரை M/s.Guru Electricals Erode,வ.எண்.5 மற்றும் 6 மட்டும் M/s. Vino Constructions Contactor Bhavani Sagar ஆகியோர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கட்டு எண். 100/2016/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 281/ 2020, நாள் : 31.01.2020**

10) 2019-2020ஆம் ஆண்டு 14 வது மத்திய நிதி குழு மான்யம் (14 th CFC -2019-2020) இன்கீழ் 267/06.1.2020 இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மண்டல செயற்பொறியாளர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு கடந்த 28.1.2020 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

சிப்பம் எண். 1 முதல் 2 வரை

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் |
|---|---|
| 1 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar |
| 2 | M/s.VBN Builders Contractor Tiruppur |

சிப்பம் எண். 3 முதல் 5 வரை

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் |
|---|---|
| 1 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar |
| 2 | M/s.Rathna & Co Contractor TN Palayam |

ஒப்பந்தப்புள்ளி (PRICE BID ) 28.1.2020 தேதியன்று திறக்கப்பட்டதில் கொடுக்கப்பட்ட விலை விகிதங்களின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன் விபரங்கள் கீழ்கண்டவாறு உள்ளது .

**சிப்பம் எண்.1**
திப்பு சுல்தான ரோடு தார் சாலையை சீரமைப்பு செய்தல்

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.VBN Builders | ரூ.2764514 | மதிப்பீடு தொகையினை விட 4.98% அதிகம் |
| 2 | M/s.Vino Constructions | ரூ.2799272 | மதிப்பீடு தொகையினை விட 6.31% அதிகம் |

சிப்பம் எண்.2
கட்டபொம்மன் நகர் தார் சாலையை சீரமைப்பு செய்தல்

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.VBN Builders | ரூ.3081738 | மதிப்பீடு தொகையினை விட 4.99% அதிகம் |
| 2 | M/s.Vino Constructions | ரூ.3099990 | மதிப்பீடு தொகையினை விட 5.61% அதிகம் |

சிப்பம் எண்.3
ராஜீவ் நகர் தார் சாலையை சீரமைப்பு செய்தல்

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions | ரூ.3232880 | மதிப்பீடு தொகையினை விட 4.98% அதிகம் |
| 2 | M/s.Rathna & Co | ரூ.3281069 | மதிப்பீடு தொகையினை விட 6.55% அதிகம் |

சிப்பம் எண்.4
அத்தாணி ரோடு சந்து எண். 1 தார் சாலையை சீரமைப்பு செய்தல்

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions | ரூ.3232880 | மதிப்பீடு தொகையினை விட 4.98% அதிகம் |
| 2 | M/s.Rathna & Co | ரூ.3281069 | மதிப்பீடு தொகையினை விட 6.55% அதிகம் |

சிப்பம் எண்.5
அத்தாணி ரோடு சந்து எண். 1 தார் சாலையை சீரமைப்பு செய்தல்

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions | ரூ.1884896 | மதிப்பீடு தொகையினை விட 4.98% அதிகம் |
| 2 | M/s.Rathna & Co | ரூ.1909538 | மதிப்பீடு தொகையினை விட 6.35% அதிகம் |

கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீடிற்கு அதிகமாக இருந்ததால் இவ்வலுலக கடிதம் எண். 5/2020/இ1 நாள். 28.1.2020 ல் ஒப்பந்தப்புள்ளி விகிதத்தை குறைந்த விலை வழங்கிய M/s. VBN Builders Tiruppur (சிப்பம் எண்.1 மற்றும் 2) மற்றும் M/s. Vino Constructions Contractor Bhavani Sagar (சிப்பம் எண்.3 முதல் 5 வரை மட்டும்) ஒப்பந்ததாருக்கு விலைக் குறைப்பு செய்து கொடுக்க (Negotiation letter ) முதல் அறிவிப்பு கொடுக்கப்பட்டது.

மேற்படி ஒப்பந்ததாரர்களுக்கு கடிதம் வாயிலாக மதிப்பீட்டிற்கு அதிகமாக பணிகள் செய்ய ஒப்புகொண்டு கடிதம் கொடுத்துள்ளார் .அவரால் வழங்கப்பட்ட விலை குறைப்பு மதிப்பீட்டிற்கு அதிகமாக இருந்ததால் மீண்டும் ஒரு முறை அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டது . அறிவிப்பினை பெற்றுக் கொண்ட M/s. VBN Builders Tiruppur மற்றும் M/s. Vino Constructions Contractor Bhavani Sagar அவர்கள் தார், எரி பொருட்கள் ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளதாலும் சத்தியமங்கலம் பகுதி சுற்றியுள்ள பகுதிகளில் கூலியாட்கள் மற்றும் திறமை வாய்ந்த ஆட்கள் இல்லாத காரணத்தால் வெளியிடங்களிலிருந்து வேலைக்கு கொண்டு வர வேண்டியது இருப்பதாலும், அவர்களின் கூலி அதிகரித்து வருவதாலும் டீசல் மற்றும் வாகன கட்டணம் அதிகரித்து வருவதாலும் கொடுக்கப்பட்ட சதவீதத்தை குறைத்து கொடுக்க இயலாதென தனது 30.1.2020 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர். எனவே அவர்கள் கொடுத்த விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

சிப்பம் எண்.1

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.VBN Builders | ரூ.2764514 | மதிப்பீடு தொகையினை விட 4.98% அதிகம் |

சிப்பம் எண்.2

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.VBN Builders | ரூ.3081738 | மதிப்பீடு தொகையினை விட 4.99% அதிகம் |

சிப்பம் எண்.3

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions | ரூ.3232880 | மதிப்பீடு தொகையினை விட 4.98 % அதிகம் |

சிப்பம் எண்.4

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions | ரூ.3232880 | மதிப்பீடு தொகையினை விட 4.98% அதிகம் |

சிப்பம் எண்.5

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions | ரூ.1884896 | மதிப்பீடு தொகையினை விட4.98% அதிகம் |

அலுவலக குறிப்பு-

இப்பணியினை நிறைவேற்றுவது அவசியமாகிறது. தார் விலை ஏற்றம் ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளதாலும் சத்தியமங்கலம் சுற்றியுள்ள பகுதிகளில் கூலியாட்கள் மற்றும் திறமை வாய்ந்த ஆட்கள் இல்லாத காரணத்தால் வெளியிடங்களிலிருந்து வேலைக்கு கொண்டு வர வேண்டியது இருப்பதாலும், அவர்களின் கூலி அதிகரித்து

வருவதாலும் டீசல் மற்றும் வாகன கட்டணம் அதிகரித்து வருவதாலும் விலை குறைப்பு கடிதம் மேல் எவ்வித குறைப்பு இயலாதுயென தெரிவித்து வரப்பெற்ற கடிதமும், முதல் அழைப்பு மட்டுமே கோரப்பட்டுள்ளதாலும் அரசு நெறிகளுக்குட்பட்டு மதிப்பீட்டை விட 5 சதவீதத்திற்கும் குறைவான அளவில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. VBN Builders Tiruppur (சிப்பம் எண். 1 மற்றும் 2 ) மற்றும் M/s. Vino Constructions Contractor Bhavani Sagar (சிப்பம் எண். 3 முதல் 5 வரை மட்டும்) அவர்களின் கோருதலின் மீது மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண்.5/2020/இ1)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்படுகிறது**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 282 / 2020, நாள் : 31.01.2020**

11) சத்தியமங்கலம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட வார்டு எண்.10,11,23,24,25,26,27 மற்றும் தினசரி சந்தை ஆகிய 7 வார்டுகளில் வெளிக்கொணர்வு முறையில் (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் 55 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு பணி மேற்கொள்ளவும் இதற்காகும் ஓராண்டிற்கான மதிப்பீட்டு தொகை ரூ.105.00 லட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி பெறப்பட்டு 4.1.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள வி.பி.என் பில்டர்ஸ் திருப்பூர் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை (நபர் ஒன்றிற்கு நாள் ஒன்றிற்கு ரூ.509.47 என்ற அடிப்படையில் ) நகர்மன்றத் தீர்மான எண். 953 நாள் 18.1.2019 இன் படி ஒப்புதல் அளிக்கப்பட்டு 1.2.2019 முதல் 31.1.2020 முடிய ஓராண்டு காலத்திற்கு வேலை ஒப்படைப்பு செய்து நாளது வரை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்று வந்த நிலையில் நடத்தை விதிகள் காரணமாக தொடந்து வரும் காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் நடைமுறைகள் மேற்கொள்ள இயலாத நிலையில் கடந்த 10.1.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு 12.2.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

எனவே ஒப்பந்தப்புள்ளி பெறுதல் மற்றும் அதனை இறுதி செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள உரிய கால அவகாசம் தேவைப்படும் நிலையில் எதிர்வரும் 1.2.2020 முதல் 31.3.2020 முடிய 50 பணி நாட்களுக்கு தற்போது பணி செய்து வரும் திருவாளர் வி.பி.என். பில்டர்ஸ் திருப்பூர் என்னும் நிறுவனத்திற்கு நபர் ஒன்றிற்கு நாள் ஒன்றிற்கு ரூ.509.47 என்ற அடிப்படையில் 31.3.2020 வரை ஒப்பந்தக்காலத்தை நீட்டிப்பு செய்து வழங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1425000/- த்திற்கும் நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :
1. நகர்மன்றம் அனுமதிக்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியம் கருதி நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.
(கட்டு எண்.973/2018/எச்1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 283 / 2020, நாள் : 31.01.2020**

12) சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் உள்ள 27 வார்டுகளில் சுமார் 40.00 கி.மி அளவில் குடிநீர் பகிர்மான குழாய்கள் உள்ளன. இக்குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு சுமார் 10 வருடங்களுக்கு மேலாகி விட்டதால் அடிக்கடி குடிநீர் குழாய் உடைப்பு ஏற்பட்டு சாலைகள் சேதம் ஏற்பட்டு சில நேரத்தில் விபத்துகள் ஏற்பட்டு வருகிறது. மேலும், நகராட்சி பகுதிக்கு உட்பட்ட ஜீவா செட், பிரிட்டோ காலனி,ராஜீவ் நகர்,அத்தாணி மெயின் ரோடு,சின்ன தேவாங்கபுரம் ரோடு, கரட்டூர் ரோடு,லட்சுமி நகர் பின்புறம் ஆகிய பகுதிகள் வெகுவாக வளர்ச்சி அடைந்து வருவதால் ஊரக பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதிகள் செய்யும் பொருட்டு பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட வேண்டியது அவசியம் ஆகும். எனவே அவசரம் அவசியம் கருதி பகிர்மான குழாய்கள் அமைக்க உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினத்தை 2019-2020 ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், திருத்திய வரவு-செலவு திட்டத்தில் சேர்க்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 284/ 2020, நாள் : 31.01.2020**

13) சத்தியமங்கலம் நகராட்சியில் இரண்டு தலைமை நீரேற்று நிலையகள், மூன்று மேல்நிலைத் தொட்டிகள் உள்ளன. இந்த நீர் தேக்கத்திலிருந்து வெளியேற்றப்படும் குடிநீர் கேட்வால்வுகள் கொண்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சியின் பல பகுதிகளில் கேட்வால்வு தொட்டிகள் இல்லாமையும்,கேட் வால்வுகள் பழுதாகியும் சீரான குடிநீர் விநியோகம் சீராக செயல்படுத்த முடியவில்லை என்று குழாய் திறப்பாளர்கள் மற்றும் குழாய் பொருத்துனர் புகார்கள் தெரிவித்து வருகிறார்கள். மேலும், பல இடங்களில் பழுதான கேட்வால்வுகளிலிருந்து குடிநீர் கசிந்து வீணாகி வருகிறது அடிக்கடி பொதுமக்கள் புகார் தெரிவித்து வருகிறார்கள். இவைகளை கருதில் கொண்டு புதிதாக கேட்வுால்வு தொட்டி மற்றும் கேட்வால்கள் பொருத்தப்பட வேண்டியது அவசியம் ஆகும். எனவே குடிநீர் விநியோகம் அவசரம் அவசியம் கருதி புதிதாக கேட்வால்வுகள் மற்றும் கேட்வால்வு தொட்டிகள் அமைக்க உத்தேச மதிப்பீடு தொகை ரூ.7.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினத்தை 2019-2020 ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், திருத்திய வரவு-செலவு திட்டத்தில் சேர்க்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 285/ 2020, நாள் : 31.01.2020**

14) சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம் 2014 ( மத்திய சட்டம் எண்.7/2014) 37-வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை)விதிகள் 2014 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம் 2015-ன் கீழ் சத்தியமங்கலம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள் 2018 இணைப்பில் கண்டுள்ளவாறு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும் அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும் மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்கு படுத்தவும், சத்தியமங்கலம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் ( வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள் 2018 ஏற்படுத்தப்பட்டு சத்தியமங்கலம் நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண். 936 நாள் 11.12.2019-ன்படி ஒப்புதல் பெறப்பட்டு மேற்கண்ட துணை விதிகளை பொதுமக்கள் வணிக பெருமக்கள் மற்றும் சாலையோர வியாபாரிகள் அனைவரும் பார்வையிட்டு ஆட்சேபணை ஏதும் இருப்பின் அலுவலக வேலை நாட்களில் இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்குள் சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளருக்கு எழுத்து பூர்வமாக தெரிவிக்குமாறு அறிவிக்கப்பட்டதில் ஆட்சேபணைகலோ, ஆலோசணைகலோ ஏதும் வரப்பெறவில்லை. எனவே சாலையோர வியாபாரிகள் ( வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 2014 பிரிவு-3-ன் கீழ் அந்த உள்ளாட்சியே துணை விதிகள் தயார் செய்யப்பட வேண்டும் என உள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.7366/2016/UPA2 நாள் 3.9.2018ஆம் தேதிய கடிதத்தில் துணை விதிகள் தயார் செய்திடவும் அதனை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதார பாதுகாப்பு நலன் கருதி விதிகளுக்குட்பட்டு துணை விதிகள் ஏற்படுத்தவும் மற்றும் அரசு வழிகாட்டி மதிப்பு மற்றும் சந்தை மதிப்பின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை அமுல்படுத்தவும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள துணை விதிகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உள்ளதை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய ஆகும் உத்தேச செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட அறிவிக்கையை மாவட்ட அரசிதழில் வெளியிட ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(கட்டு எண். 2731/2014/எப்1)

## SATHYAMANGALAM MUNICIPALITY

Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Bye-laws, 2018

## NOTIFICATION

Roc.No.2731/2014/f1 Resolution No/Date:936/11.12.2018

In exercise of the Powers conferred by Section 37 of the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Act, 2014 (Central act 7 of 2014), and subject to the other Provisions of the Act, the Tamil Nadu Street Vendors (Protection of Livelihood, Regulation of Street Vending and Licensing) Scheme, 2015 and the Tamil Nadu Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Rules, 2015 made there under, the (Sathyamangalam Municipality), hereby makes the following bye–laws for the Street Vending.

In accordance with chapter XV section 433 of the Madurai City Municipal Corporation Act, 1971 / chapter XV section 432 of the Coimbatore City Municipal Corporation Act, 1981 / chapter XIV section 306 of the Tamil Nadu District Municipalities Act, 1920 and their subsequent revisions in the sub-sections thereof and in order to ensure effective regulation of Street Vending in the Sathyamangalam

Municipality, the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Bye-Laws, 2018 are framed.

## CHAPTER I

## PRELIMINARY

1. **Short title and Commencement-** (1) These Bye – Laws may be called the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Bye-laws, 2018 for Sathyamangalam Municipality.

   (2) It shall come into force on the date of its publication

2. **Definitions** - In these bye-Laws, unless the context otherwise requires,-

(i) "*Act*" means the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending ) Act, 2014 (Central Act 7 of 2014);

(ii) "*Plan*" means a plan prepared under section 21 of the Act;

(iii) "R*ules*" means The Tamil Nadu Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Rules, 2015;

(iv) "*Scheme*" means the Tamil Nadu Street Vendors (Protection of Livelihood, Regulation of Street Vending and Licensing) Scheme, 2015 framed under section 38 of the Act;

(v) "*town vending Committee*" means a town vending Committee constituted under the rules;

Words and expressions defined in the Act, Rules or Scheme and used in these Bye-Laws shall have the same meaning as respectively assigned to them in the Act, Rules and Scheme.

## CHAPTER –II
## REGULATION AND MANNER OF VENDING IN VENDING ZONES

3. (1) The town vending committee shall decide vending zones considering the intensity of foot falls, road width and the vehicular and pedestrian movement in the roads in the area.

   (2) The carrying capacity of an area would put the limit on the number of street vendors which can be positioned in any area. It shall be the duty of the designated official of the Sathyamangalam Municipality to keep a check that the number of mobile vendors at a specific place shall not cross the limit fixed by the town vending committee.

(3) The restricted vending zones are mainly linked up with the road width, and the roads of the following description have been put in this category in the plan;

i. No stationery vending is proposed on the roads having very small width equal to 6 meters having two way traffic. However, street vending can be allowed if any such roads are declared as no vehicular road, at any point of time.
ii. No street vending for the roads having small width between 3 meters to 5 meters. However, street vending can be allowed if such road is declared one way vehicular road.
iii. One side street vending on the roads having reasonably big width between 5 meters to 6 meters.
iv. Both side street vending for the roads having big width 10 meters and above.
v. The number of street vendors shall be decided after taking into consideration the holding capacity of each designated vending area on such a road,
vi. Such stationary vending shall be allowed after taking the clearance from traffic police regarding the smooth vehicular and pedestrian movement. If necessary, road side parking shall be banned in areas where street vending is allowed.

vii. Mobile vending shall be allowed on such roads considering sufficient space for traffic and pedestrian movement, and

viii. Suggestive road designing as provided in the Annexure appended to these bye-laws.

(4) No vending zones,-

(i) 10 meters from the entry and exit points of the Government buildings, High Court, Other Courts, District Collectorate, Offices of District Panchayat, Municipal Corporation / Municipality, Fire Brigade stations etc.

(ii) 50 meters from the entry and exit points of railway stations.

(iii) 30 meters on both the sides of railway crossing falling within the city limits.

(iv) 50 meters from the entry and exit points of bus terminus.

(v) No vending in the areas as enjoined in the relevant provision of Ancient Monuments and Archaeological Sites and Remains Act, 2010 and the State Archaeological Monument Protection Act.

(vi) The areas prohibited under the provisions of the Built Heritage Conservation Rules.

(vii) 30 meters from any crossing of two or more roads on all sides.

(viii) 30 meters on both the side from the entry and the exit of any educational institution.

(ix) Any Area which the state has prohibited from being used as vending space from the angle of security.

(x) Any other area which the local Body in consultation with the Town Vending Committee considers fit to be included in the category of no vending zone,

Note: No existing market or a natural market as identified under the survey is to be included as a no–vending zone.

**4. Restriction on street vendors**,- A street vendor who has been granted the certificate of vending for any vending zones shall not-

(i) obstruct or interfere with vehicle, bi-cycle or pedestrian traffic or their safety,

(ii) obstruct or interfere with doorways, entrances, fire doors or emergency exits abutting the street.

(iii) obstruct or interfere with any utilities like water supply, sewerage, telephone, electricity, or similar installations.

(iv) obstruct or interfere with any other structures, sign boards, display units, city works or operations, on or adjacent to the street.

(v) sell any objectionable goods or services or merchandise etc.

(vi) occupy more space than allotted by the town vending committee

(vii) sell goods or service or merchandises after fixed hours as specified by the town vending committee.

(viii) throw garbage anywhere except at specific places identified by the local authority.

(ix) sell the goods or service or merchandises after expiry of the certificate of vending, and

(x) make use of loudspeakers, megaphones, sound systems or other amplification equipment and reflective signage.

**Responsibility of Street vendors**,- It shall be the duty of the street vendors or his family members or employee to,-

(i) Comply with all the conditions specified in the certificate of vending;

(ii) vend in the place specified in the certificate of vending;

(iii) display the certificate of vending at the vending place all the time;

(iv) ensure that either the street vendors or his family member whose name has been mentioned in the certificate of vending nor his employee remains present at the vending place during the vending hours;

(v) keep the vending place safe and in good conditions at all the times;

(vi) comply with any safety and sanitary requirement of the local authority;

(vii) comply with all the requirements of the Prevention of Food Adulteration Act, 1954 or any other laws, as applicable :

(viii) comply with the Municipal Solid Waste Management Rules, 2016;

(ix) comply with the Plastic Waste Management Rules, 2016;

(x) produce the certificate of vending when demanded by the competent authority, and

(xi) Follow all the requirement of these bye-Laws

## CHAPTER – III
## FEES, CHARGES, TAXES AND PENALTIES

**5. Vending Fees:-**

(1) Vending Fees to be paid to the local authority by the Street vendors.

(2) The vending fees under clause (1) shall be as mentioned in the table below:-

| Sl. No. | Category of Street Vendors | Area | Vending Fee |
|---|---|---|---|
| 1. | Stationary Vendor (Full time) | Upto 10 sq.ft. | 1% of the Guideline value subject to minimum of Rs.750/- per annum |
| | | From 10 to 25 sq.ft. | 2% of the Guideline value subject to minimum of Rs.1500/- per annum |
| | | More than 25 sq.ft. | 3% of the Guideline value subject to minimum of Rs.3000/- per annum |
| 2. | Stationary Vendor (Part time or time sharing ) | Upto 10 sq.ft. | 0.5% of the Guideline value subject to minimum of Rs.375/- per annum |
| | | From 10 to 25 sq.ft. | 1.0% of the Guideline value subject to minimum of Rs.750/- per annum |
| | | More than 25 sq.ft. | 1.5% of the Guideline value subject to minimum of Rs.1500/- per annum |
| 3. | Mobile Vendor (with motor vehicle) | Upto 10 sq.ft. | Rs.750/- per annum |
| | | From 10 to 25 sq.ft. | Rs.1500/- per annum |
| | | More than 25 sq.ft. | Rs.3000/- per annum |
| 4. | Mobile Vendor (without motor vehicle) | Upto 10 sq.ft. | Rs.375/- per annum |
| | | From 10 to 25 sq.ft. | Rs.750/- per annum |
| | | More than 25 sq.ft. | Rs.1500/- per annum |
| 5. | Mobile Vendor (Headloads) | - | Rs.250/- per annum |

(3) Once in three years the Vending Fees shall be revised and published in the notice board of the local body.

**7. Maintenance Charges:-** (I) The monthly maintenance charges to be paid to the local authority for the civic amenities and facilities in the vending zones shall be according to the category to the street vendors and the status of the market. The categories of the vendors and markets shall be decided by the town vending committee.

(2) The charges under clause (1) shall not be less than Rs. (100/-) and more than Rs. (1000/-) per month / half year /year.

**8. Penalty to be levied:-** (1) If any street vendor-

(i) who fails to relocate to the place specified in the certificate of vending or vacate the existing restricted or prohibited zone

(ii) indulges in vending activities without the certificate of vending or contravenes the term of certificate of vending or contravenes any other terms and conditions specified for the purpose of regulating street vending under the Act, rules or scheme made there under,

shall be liable to pay a penalty (three) times of the amount of the monthly maintenance charge.

(2) if the street vendor breaches the conditions laid down in the Certificate of Vending three times, his certificate of vending shall be suspended and if the street vendors breaches the condition the 4$^{th}$ time, his certificate shall be cancelled.

## CHAPTER – IV
## MISCELLANEOUS

**9. Regulation of traffic in vending zones:**- (1) Wherever a vending zone is declared by the town vending committee, the traffic police shall decide about one way traffic,

speed limit, parking, movement of heavy vehicles and such other incidental matters. In a case where the traffic police does not agree with the declaration of the vending zone in a particular area, the town vending committee shall reconsider in respect of vending zones and decide either to shift or to cancel the zone for such areas.

(2) The local authority shall clearly earmark the vending area, footpath and carriage way in the vending zones.

**10. Regulation of quality of products and services provided to public in vending zones:-** Any vendor, who sells food articles, readymade or processed, on the site, he shall follow all the provisions of the Prevention of Food Adulteration Act, 1954. In case of failure, penal measures shall be initiated by the concerned authority as provided in that Act and on conviction by the competent court, his certificate of vending shall be cancelled by the town vending committee with immediate effect.

**11. Regulation of civic services in vending zones:-** (1) The public toilet and drinking water facilities be provided in the vending zones by the local authority.

(2) The proper collection of solid waste management system shall be provided by the local authority.
(3) The lighting to vendors shall be allowed by rechargeable lamps or self energizing mechanism.
4) No individual electricity and water connection be allowed in the vending zones.

5) Illegal tapping of electricity from the electricity post is prohibited.

## சத்தியமங்கலம் நகராட்சி

**சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018**

**<u>அறிக்கை</u>**

**ந.க.எண். 2731/2014/எப்1** **தீர்மானம் எண்/நாள்.936/11.2.2018**

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37வது பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015–ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் சத்தியமங்கலம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 அத்தியாம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்குப்படுத்தவும், சத்தியமங்கலம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 ஏற்படுத்தப்படுகின்றது.

**அத்தியாயம்–1**

**முதனிலை**

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.–** இந்த துணை விதிகள் சத்தியமங்கலம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 என்றழைக்கப்படும்.

(2) இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்

2. **பொருள் வரையறைகள்.–** இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை,

**(i)** "சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்;

**(ii)** "விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைப்படம் என்று பொருள்படும்;

**(iii)** "விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்;

**(iV)** "திட்டம்" என்பது சட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015 என்று பொருள்படும்;

**(V)** "நகர விற்பனைக் குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்;

சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம்–2

## விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்

**3.(1)** பாத சாரிகளின் நடமாட்டம் (Foot fall) மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலங்களை நகர விற்பனைக் குழு முடிவு செய்யும்.

(2) ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து சத்தியமங்கலம் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிப்பார்க்கப்பட வேண்டும்.

(3) சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரங்களைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுபடுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களை விவரிக்கப்பட வேண்டும்.

i. இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனங்கள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.
ii. 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.
iii. 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.
iv. 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையின் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.
v. ஒரு சாலையில் விற்பனைஅனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.
vi. சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.
vii. வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.
viii. சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4) சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களின்,

i. அரசு கட்டிடங்கள், உயர்நீதி மன்றம், பிற நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி / மாநகராட்சி / நகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கும்,
ii. இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,
iii. நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கங்களிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,
iv. பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

v. பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.
vi. மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்
vii. இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து பக்கங்களில் 30 மீட்டர் நீளத்திற்கு
viii. எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும் வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு.
ix. பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்
x. நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

குறிப்பு– கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்த ஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அங்காடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

**4. சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு.–** எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்;

i. வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,
ii. கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,
iii. குடிநீர் வழங்கல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,
iv. சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள் , நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,
v. ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது,
vi. நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது,
vii. நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது,
viii. உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.
ix. விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.
x. ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

**5. சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு,–** சாலையோ வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

i. விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்,
ii. விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்படவேண்டும்,
iii. விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்,
iv. விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.
v. எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்,
vi. உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,
vii. உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,
viii. நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

ix. நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,
x. தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும், மற்றும்
xi. இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## அத்தியாயம்–3

## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்

**6. விற்பனை கட்டணம்,– (1)** சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.

(2) உப விதி (1)ன்படியான விற்பனை கட்டணம் கீழ்க்காணும் பட்டியலின்படியாகும்.

| வ. எண். | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1. | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.750/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள்வரை | வழிகாட்டி மதிப்பில் 2 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1500/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் – வருடத்திற்கு ரூ.3500/–க்கு குறையாமல் |
| 2. | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.375/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.750/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1500/–க்கு குறையாமல் |
| 3. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1500/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.3000/– |
| 4. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.375/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.1500/– |
| 5. | நடமாடும் விற்பனையாளர் (தலைசுமை) | – | வருடத்திற்கு ரூ.250/– |

(3) மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

**7. பராமரிப்பு கட்டணம்,–**

1) சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.
2) உப விதி (1)யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு /அரையாண்டிற்கு / ஆண்டிற்கு ரூ. 100 /–க்கு குறையாமலும், ரூ. 1000 /–க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

**8. அபராதம் விதித்தல்,–** எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

i. விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில், அல்லது

ii. விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது,

மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

(2) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனையாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

## அத்தியாயம்– 4
## பலவகை

**9. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல்.–**

(1) நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனங்கள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

**10. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுங்குபடுத்துதல்.–** எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.

**11. விற்பனை மண்டலங்களில் குடிமை சேவைகளை ஒழுங்குப்படுத்துதல்,–**

1) விற்பனை மண்டலங்களில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.
2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.
3) சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (Rechargeable lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் உபயோக படுத்தல் வேண்டும்.
4) விற்பனை மண்டலங்களில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கக் கூடாது.
5) மின்சார கம்பங்களிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும்.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.